DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-29/2020

Prosecution witness - PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ஜெய்புன் நிஷா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petiton u/s.317 Cr.P.C filed and allowed)

14.10.2025- 05.05 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் வாலிநோக்கத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எதிரியை தெரியும். உள்ளூர்காரர். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்.

2. நடந்து முடிந்த ஊராட்சி மன்ற தேர்தலில் எங்கள் ஊரைச் சேர்ந்த பீர்முகமது என்பவர் ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டார். நான் அவருக்கு ஆதரவாக வேலை செய்து வந்தேன். எதிரியும் மேற்படி தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் நான் வேலை பார்த்த பீர் முகமது தேர்தலில் வெற்றி பெற்றார். பின்னர் வெற்றி பெற்ற பீர்முகமது என்பவருக்கு பதவிப்பிரமாணம் நடந்தது. அதன் பின்னர் ஊரில் உள்ள ஒவ்வொரு நபரும் என்னிடம் வந்து நானும், பீர்முகமது என்பவரும் தவறாக இருப்பாதாக எங்கள் ஊரைச் சேர்ந்த ஹக்குல்லா மற்றும் அசனாலெபை ஆகியோர் சொன்னதாக சொன்னார்கள்.

3. நான் இது சம்மந்தமாக ஜமாத்தாரிடம் கேட்டபோது ஜமாத்தார் இது சம்மந்தமாக மறுப்பு தெரிவித்தனர். ஆனால் என்னையும், பீர்முகமது என்பவரையும் ஜமாத்தார்கள் தான் பிடித்தார்கள் என்று சொன்னார்கள். பீர்முகமது என்பவரது மனைவிதான் என்னையும், பீர்முகமதுவும் தவறாக இருந்தபோது அவரது வீட்டில் பிடித்ததாக சொல்லியுள்ளார்கள். எதிரி தான் என்னையும், பீர்முகமதுவையும் தவறாக சித்தரித்து ஊருக்குள் பரப்பி விட்டுள்ளார். நான் முகமது முசாமிடம் ஏன் தவறான செய்திகளை பரப்பிகிறாய்

என்று கேட்டபோது அதற்கு அவர் நான் ஊரில் யாரிடமும் இது சம்மந்தமாக சொல்லவில்லை என்றும், ஹக்குல்லா மற்றும் அசனாலெபை ஆகிய இருவரிடம் மட்டும் தான் சொன்னதாகவும் என்னிடம் சொன்னார். அன்றிலிருந்த இந்த சம்பவத்தால் எனக்கு மனவேதனை ஏற்பட்டு இன்று வரையில் இருந்து வருகிறது. என்னால் ஒவ்வொரு நாளும் ஊருக்குள் தலை நிமிர்ந்து நடந்து செல்ல இயலவில்லை.

4. வெளிநாட்டில் உள்ள எனது கணவரை வர சொல்லி வேதனை பட்டேன். நான் மனஉளைச்சலிலிருந்து மீண்டு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். என்னை போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்த புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் வைத்து எழுதி படித்து காண்பித்த பின்னர் தான் கையொப்பம் செய்தேன். புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 13.01.2020 ந் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அதற்கு பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 10 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு காரணம் எதுவும் புகார் மனுவில் கூறவில்லை என்றால் தகவல் கிடைத்த உடனடியாக புகார் செய்தேன். எதிரி நேடியாக என்னிடம் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான்.

ஹக்குல்லா மற்றும் அசனாலெபை ஆகியோர் ஊரில் உள்ள நபர்களின் மூலமாக எனக்கு தெரிந்தது என்றால் சரிதான். இன்று என்னை நீதிமன்றத்திற்கு பீர்முகமது அழைத்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது கணவருடன் வந்துள்ளேன். எதிரி பீர்முகமதுவை எதிர்த்து தேர்தி7 ல்

போட்டியிட்ட காரணத்தினால் பீர்முகமது தூண்டுதலின் பேரில் பொய்யாக புகார் மனுகொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் அன்றைய தினமே புகார் மனு கொடுத்திருப்பேன் என்றாலும், 10 நாட்கள் காலதாமதமாக புகார் மனுவை கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி